திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் செயல்வீரர் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு வருகின்ற 19 தேதி அன்று கழக தலைவர் திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தருவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, சி.ஜெ.சீனிவாசன், காயத்ரிஸ்ரீதர், பா.நரேஷ்குமார், எம்.முத்தமிழ் செல்வன் வி.குமார், எஸ்.சங்கர், இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், டி. அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன் எம்.இளையான், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், சுமதிகுமார், பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமலேழகன், உள்பட பலர் உள்ளனர்.

ஏழை – நடுத்தர மக்களின் நலனுக்காக

‘வந்தே பாரத்’ ரயில்களில் கட்டணம் குறைக்கப்படுமா?

மாநிலங்களவையில் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஏப். 10 -

ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனுக்காக வந்தே பாரத் ரயில்களில் கட்டணம் குறைக்கப்படுமா என கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காத ரயில்வே அமைச்சர், அது இந்திய ரயில்வேயின் செயல்முறை என பதிலளித்துள்ளார்.

வந்தே பாரத் ரயில் கட்டணக் குறைப்பு மற்றும் புதிதாக வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்துவது இந்திய ரயில்வேயின் தொடர் செயல்முறை என, திமுக எம்.பி. இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட மெட்ரோ நகரங்களில் வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதா என திமுக எம்.பி. இரா. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு, அது இந்திய ரயில்வேயின் தொடர் செயல்முறை என ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட மெட்ரோ நகரங்களில் வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதா? தற்போது நாடு முழுவதும் எத்தனை வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன? ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனுக்காக வந்தே பாரத் ரயில்களில் பயணக் கட்டணத்தை குறைக்கும் திட்டம் உள்ளதா?

இவற்றிற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்துள்ள பதிலில், மாநில எல்லைகளை தாண்டிய ரயில்வே வலையமைப்பில், இந்தியா ரயில்வேயால் நாடு முழுவதும் தற்போது 136 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன என்றும், அதில் தமிழ்நாட்டில் மட்டும் 16 வந்தே பாரத் ரயில்கள் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்துவருதாக குறிப்பிட்டு ள்ளார்.

புறநகர் மற்றும் பிராந்திய பயணிகளின் பயண அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் “நமோ பாரத் ரேபிட் ரயில்” எனப்படும் “வந்தே மெட்ரோ” சேவையை இந்திய ரயில்வே (IR) அறிமுகப்படுத்தியுள்ளதாகவும், அதன்படி 2 நமோ பாரத் ரேபிட் ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன என்றும் பதில் அளித்துள்ளார். புதிதாக வந்தே மெட்ரோ சேவைகள் உட்பட புதிய ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துவது இந்திய ரயில்வே துறையில் ஒரு தொடர் செயல்முறையாகும் என்றும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. - செந்தில்குமார் முன்னிலை - என்.கிருஷ்ணன் ஏற்பாட்டில்

இராயபுரம் 50 அ வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, ஏப். 10 -

தமிழக முதல்வர் தளபதி அவர்களின் ஆணையின்படியும் துணை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 50 அ வட்ட கழகத்தின் சார்பில் 10.4.25 அன்று மணியளவில் இராயபுரம் கிழக்கு கல்மண்டபம் சாலை நரேஷ் நகைக்கடை எதிரில் சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் R.D.சேகர் எம்.எல்.ஏ. தலைமையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி , இராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி , கிழக்கு பகுதி செயலாளர் செந்தில் குமார் ஆகியோர் முன்னிலையில் வட்ட கழக செயலாளர் என்.கிருஷ்ணன் அவர்களின் ஏற்பாட்டில் பொது மக்களின் தாகம் தீர்க்க தண்ணீர் பந்தல் திறக்கப்பட உள்ளது..இந்நிகழ்வில் மாநில ,மாவட்ட, பகுதி ,வட்ட கழக, நிர்வாகிகள், பாக முகவர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் திரளாக கலந்து கொள்ள உள்ளனர்.

நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ஆர்.பாலாஜி அறிக்கை

நாமக்கல் ஏப். 10-

நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி வெளியிட்டுள்ள அறிக்கையில், நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக மற்றும் ஆலோசனைக் கூட்டம் இன்று10ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் உள்ள கொங்கு சமுதாய கூடத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமை தாங்குகிறார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர் பாலாஜி, துணை அமைப்பாளர்கள் பூக்கடைசுந்தர், நவலடி ராஜா, கதிரவன், மல்லை ஜெகதீஷ்குமார், கார்த்திகேயன், முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்

இக்கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.சீனிவாசன், கழக செய்தி தொடர்பு குழு இணை செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா மற்றும் தலைமைக் கழக நிர்வாகி இளமாறன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றனர். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் கண்டிப்பாக அனைவரும் வெண் சீருடையில் கலந்து கொள்ள வேண்டும் என இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம், லாடர்ஸ் கேட்டில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.29.82 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்குக் கூடம் மற்றும் ரூ.29.86 இலட்சம் மதிப்பீட்டில் டென்னிஸ் ஆடுகளம் அமைக்கும் இரண்டு திட்டப் பணிகளுக்கு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய இளைஞரணி சார்பாக வடகரை ஊராட்சியில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் உ.பிரேம் மற்றும் சே.அஸ்வின் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் ச. அற்புதராஜ் ஆகியோர் முன்னிலையில் கோடை வெப்பத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் நீர் மோர் பந்தலை கழக முன்னாள் புழல் ஒன்றிய பெருந்தலைவர் தங்கமணி திருமால் திறந்து வைத்தார் உடன் ஒன்றிய துணை செயலாளர் ர. முருகன், கிளை செயலாளர் ஜி.கந்தசாமி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஒன்றிய மாவட்ட பிரதிநிதி நா.ஜெகதீசன், ஒன்றிய வழக்கறிஞர் அணி அமைப்பாளர் இ.ரா.திராவிடடில்லி, மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அ.டேவிட்(எ)நாவலன் ,மா.குறளரசன்,அ,மணிமாறன், ஆகியோர் முன்னிலை வகித்தனர் மற்றும் கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் கழகத் தொண்டர்கள் பங்கேற்றனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.சசிக்குமார் தலைமை

முதல்வரால் தழைத்தது தமிழகம் - திருவி.க.நகரில் புகழரங்கம்!

கு.செல்வப் பெருந்தகை - துரைவைகோ - ஆளூர் ஷாநாவாஸ் சிறப்புரை!

சென்னை, எப். 10 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் -46 முதல்வரால் தழைத்து தமிழ் நாடு! முதலிடம் ஆனது புகழோடு!! எனும் தலைப்பில் வி.க.நகர்தெற்கு பகுதி 76வது வட்டம் சார்பாக மாபெரும் புகழரங்கம் 06.04.2025 புதன் கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், வெங்கட்டம் மாள் சமாதி, பிரிக்கிளின் சாலை (ஐந்து விளக்கு அருகில்) நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் 76வது வட்ட கழக செயலாளர் S.சசிக்குமார் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு முன்னிலை வகித்தார்.

பெருநகர மேயர் ஆர். பிரியா ராஜன் கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி மாநில பொறியியாளர் அணி இணை செயலாளர் அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. திருவிக நகர் தொகுதி பார்வையாளர் கிருஷ்ணமூர்த்தி பகுதி செயலாளர்கள் எம்.சாமிகண்ணு செ.தமிழ் வேந்தன் மற்றும் சரிதா மகேஷ்குமார், ர் இசட். ஆசாத், புனிதவதிஎத்திராசன் ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வ பெருந்தகை எம்எல்.ஏ, ம.தி.மு.க முதன்மை செயலாளர் துரை.வைகோ எம்.பி, ஆளூர் ஷாநவாஸ், எம்.எல்.ஏ, துணைப்பொதுச்செயலாளர்-வி.சி.க ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவில் வானவில் விஜய் டி.லோகேஷ், லயன் பி.உதயசங்கர், நா.துலுக்கானம், எம்.பெரோஸ்கான், இரா.வீரமணி, கா. ராஜ்முகமது, தமிழ்ச்செல்வி சசிகுமார்,ரமணிலோகேஷ், மு.சரவணன் பி.ஜெ.துளசிங்கம் அ.கருணாநிதி அ.கோவிந்தன் பி.சுகுமார் வனாஜாசண்முகம் த.கருணாநிதி வே.து.தாமரைசெல்வம் ர.கலைவேந்தன் அ.கதிரவன் எல் சுப்பிரமணி ஓட்டேரி ஆர் சூரி நெல்லைமா முத்தையா கி.நாகலிங்கம் எச்.திவாகர் கனல்கங்கா ப.ரீதர்ராஜன் வழக்கறிஞர்அ.சேதுராமன் எஸ்.சதீஸ்குமார் பட்டா எஸ்.எல்.நாராயணன் எப்.அபு ஈஸ்வரி கண்ணன் பி.புகழ்செந்தில் ரா.சுரேஷ் பட்டாளம் எம் செந்தில் குமார் பா.பி.தாஸ் எம்.சக்திவேல் சாவித்திரி அன்பழகன் சாந்தி மாசிலாமணி கோ.கருணாகரன் ஏ.ஜி.எஸ்.கோல்டுஜி புல்லட் என்.பாஸ்கர் இரா.தனசேகர் அ.மகேஷ் தெற்கு பகுதி வட்ட செயலாளர் வி.க.வெங்கடேசன் எம்.தமீம் பொல்லு (எ)டி.சுரேஷ் ஜி.ஏழுமலை ஆ.குருமூர்த்தி ரா.ஞானசௌந்திரி கே.முருகா என்.எம் செந்தில் சரவணன் கே.முரளி(எ)குள்ளா டி.நீதிதேவன் வி.டில்லிராஜ் பி.மலர் டி.செந்தில் விஜி ஆர்.கார்த்திகேயன் எஸ்.மணிமேகலை பிரியா சுரேஷ் எஸ்.கவிதா லோ.கதிரவன் ஜே.பிரகாஷ் வி.செல்வகுமார் நாடார் எம் சீனிவாசன் எஸ்.நரேந்திரன் வழக்கறிஞர் சுரேஷ் தருண் ஜெயபால் கிஷோர் கண்ணன் என்.சுரேந்திரன் என்.திலிப்குமார் எம் ஹரிதாஸ் ஏ.கே.பரணிகுமார் மற்றும் கழக முன்னோடிகள் சிறப்பித்தனர்.

முதல்வர் பிறந்த நாள் : மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! டி.குமார் வரவேற்புரை!

சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை!

காஞ்சிபுரம்,ஏப்.10-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட நாயகர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கல் மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (10.4.2025வியாழக்கிழமை) மாலை5 மணிக்கு, சாலவாக்கத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச்செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

சாலவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர் டி.குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

எஸ்.பி.வி.எஸ். சத்யா சக்திவேல், எஸ்.ஆர்.அப்பாதுரை, ஐ.பாபுஷரீப், எஸ்.பி.நடராஜன், இ.நந்தா, பி.வி.அழகப்பன், பி.சேகர், ஆர்.தங்கராஜ், கே.கன்னியம்மாள் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கி தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை யாற்றுகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., தக்கோலம் தேவபாலன், கெ. ஞானசேகரன், ஞா. ஹேமலதா, கு.வசந்தி, கு.துரைவேல், ஜி. சிவராமன்,ப.சசிகுமார், என்.எஸ். பாரிவள்ளல், என்.ரவி, ப. கார்த்திகேயன், பெ.மணி, டி.சஞ்சய்காந்தி, த.சத்தியமூர்த்தி, எஸ்.முரளிதரன், எஸ்.ரத்தினமாலா, என்.எஸ். ரவி, வி.ஞானசேகர், ஜெ. சுஜாதா, பி.வெ.பாலமுருகன், ஆர். வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டி யன், பி.சுப்பிரமணி, நதியா கோபி, ஆர்.சந்திரா, ஆர்.கல்யாணசுந்தரம், த.அன்புராஜ், பவுன்சின் ராஜ், தீபாகாமராஜ்,

க.வெங்கட்ராமன், டி.கோகுலகண்ணன், சு.பலராமன்,செ.விஷ்ணு, சு.வீரமாள், மாசிலாகோபி, எஸ். கௌரிநாதன்,எ.தர்மராஜ், பி.வெங்கடேசன், எ.தர்மராஜ், நாகம்மாள் மாரி, தா. சுந்தரமூர்த்தி, கோத ண்டராமன், சுதாலட்சுமி செல்வகுமார், சுஜாதா ஜெயராமன், சற்குணம் மாதவன், பூங்கோதை சேட்டு, க.வெங்கட்ராமன், பொன்மொழி சுபாஷ், தேன்மொழி மணி, மஞ்சுளா முருகன், ஜெகாந்தி முரளி, கோமளாஐயப்பன், சுப்பம்மாள் தம்பிபெருமாள், ஏ.இ.பாலு, பி.சுப்பிரமணி, இந்தரா மோகன், கார்த்திகேயன், பி.ராமச்சந்திரன், எஸ்.பிருந்தாவதி, கலைச்செல்வி கோதண்டராமன், கே.முனுசாமி, எழிலரசி யுவராஜ், கே.கே. வெங்கடேசன், எம்.சிகாமணி, யு.ஜபுருல்லா ஷெரிப், கே.எஸ்.பாபு, டி.தேவராஸ், கே.ரவி, ஆர். சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எஸ்.ஆர்.வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.

பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில்

திருவொற்றியூர் பெரியார் நகரில் தண்ணீர் பந்தல்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் திறந்து வைத்தார்!

சென்னை.ஏப்.10-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில்,திருவொற்றியூர் எம் டி எம்.பள்ளி பெரியார் நகர் பேருந்து நிறுத்தம் அருகில் மக்களின் கோடை வெப்பதை தணிக்க தண்ணீர் பந்தலை தலைமை கழக மூத்த பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கே.பி.சங்கர் எம்எல்ஏ தொகுதி பொறுப்பாளர் ஆரம்பாக்கம் ஆறுமுகம், பகுதி செயலாளர்கள் தி.மு.தனியரசு, வை.மா.அருள்தாசன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், பகுதி கழக நிர்வாகிகள் ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார் ஆர். குமரேசன் வட்ட செயலாளர் ஏகா. கார்த்திகேயன், மாவட்ட கழக பிரதி நிதிகள் கே.கார்த்தி, கேயன்குட்டி என்கிற எத்திராஜ், எம்.எஸ் பாண்டியன் சீனிவாசன், மோகன் இரா. கணேசன், திருமலை மற்றும் திரளான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு இளநீர்,தர்பூசணி, முலாம்பழம், வெள்ளரிக்காய், மோர் மற்றும் குளிர் பானங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியை சென்னை வடகிழக்கு மாவட்ட திருவொற்றியூர் கிழக்கு பகுதியின் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எம். மணிகண்டன் ஏற்பாடு செய்திருந்தார்.

தியாகராயர் நகர் 132 வது வட்ட மாவட்டப் பிரதிநிதி ச.சங்கரின் அத்தை மறைந்த ஆர்.மாயாதேவி அவர்களின் திருவுருவப் படத்தை தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் திறந்து வைத்தனர். ந.மோ.முரளி, கே.எஸ். வெல்டிங்ராஜா, கார்த்திகா பாஸ்கரன் எம்.சி. மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 2219/MDS, பேரவை இணைப்பு எண். 762) நிர்வாகிகள் தேர்தலை பேரவைச் செயலாளர் எம்.சண்முகம் ஆணையாளராக பொறுப்பேற்று நடத்தி வைப்பார். தேர்தல் தொடர்பான விதிமுறைகள், கால அட்டவணை ஆகியவை தேர்தல் ஆணையாளரால் தனியாக வெளியிடப்படும்.

`அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.
நாள்: 09.04.2025.

மு.சண்முகம் எம்.பி.
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஆர்.கே.பேட்டை மேற்கு ஒன்றியம் பெரியநாகப்பூண்டி கிராமத்தை சேர்ந்த கழக மூத்த முன்னோடி வெங்கடாசலம் உடல்நிலை குறைவால் இயற்கை எய்தினார் தகவல் அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி.என்.சண்முகம், பெ. பழனி, கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்